# முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண். 317/2022

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 30–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: ஜெயலட்சுமி** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். வம்சாவளிப்பட்டியல் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 27.11.1956 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.05.2009 தேதியிட்ட முத்துசாமியின் வாரிசுரிமைச் சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 19.06.2013 தேதியிட்ட குப்பாயியின் வாரிசுரிமை சான்றிதழ் நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.09.2022 தேதியிட்ட முத்துக்கவுண்டர் (எ) முத்துசாமி, வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கணினிப்பட்டா (பட்டா எண்.1569) கணினி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.09.2022 தேதியிட்ட முத்துக்கவுண்டர் மற்றும் 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கணினிப்பட்டா (பட்டா

எண்.1598) கணினி நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.09.2022 தேதியிட்ட முத்துக்கவுண்டர் மற்றும் 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கணினிப்பட்டா (பட்டா எண்.1870) கணினி நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.09.2022 தேதியிட்ட தாவா சொத்துக்குண்டான வழிகாட்டி மதிப்பு நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.30 16:49:42 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.